அகுரண பிரதேச சபை - 2024

-----------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அகுரண பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அகுரண பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றுத.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும்

எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வலப்பனை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 200,000 ஆன பாலர் பாடசாலை கட்டிடம் மற்றும் ரூபா 500,000 ஆன பொருளாதார நிலையம் அமைந்துள்ள காணி மூலதனம் ஆக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் உழவு இயந்திர உதவி பாகங்களைப் பெற்றுக் கொள்வதற்காக செலுத்த வேண்டிய ரூபா 109,900 தொகை இரண்டு முறை கணக்கீடு செய்யப்பட்டமையால் ரூபா 109,900 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு உடன்படிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் 05 அபிவிருத்தித் திட்டங்களில் மொத்தம் ரூபா 19,152,703 ஆன மதிப்பிடப்பட்ட தொகை ஒன்று கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீட்டை பெற்றுக் கொண்டதன் பின்னர் நடைமுறைப்படுத்துவதாக. | உடன்படிக்கை செய்யப்பட்டதன் பின்னர் செயற்திட்ட பெறுமதி கடன் கொடுத்தோராக்கப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்த இரண்டு கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அதற்குரிய பயன்பாட்டு அட்டவணைகளில் காண்பிக்கப்பட்ட மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 476,868 ஆன அளிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக. | கணக்கு மீதிகள் பயன்பாட்டு அட்டவணை களுடன் ஒப்பிடப்பட்டு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்படும் ரூபா 2,556,398 ஆன 03 சொத்து விடயங்களுக்குரிய நிலைத்திருதன்மையை உறுதிப்படுத்தாமை காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக. | சொத்துக்களின் இருப்பினை உறுதிப்படுதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்**<br>நி.பி. 571(3) | நானாவித வைப்புக்கள் மற்றம் நிர்மாண பிடிகாசு தொகையில் 2014 முதல் 2024 யூன் வரையான காலப் பகுதியில் 92 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 1,457,773 ஆன வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | எதிர்காலத்தில் தீர்வு செய்வதாக. | காலாவதியான வைப்புக்கள் தீர்வு செய்யப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 62,504,916 ஆக

இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 34,828,187 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 7,624,500 | 11,259,027 | 6,048,138 | 9,049,596 | 7,624,500 | 7,624,500 | 7,974,669 | 3,838,707 |
| (ii) | வாடகை | 10,572,639 | 10,185,068 | 9,762,024 | 2,256,139 | 10,527,239 | 6,577,177 | 9,611,145 | 1,833,095 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங் கள் | 4,385,000 | 3,687,320 | 3,687,320 | - | 4,295,500 | 3,200,000 | 4,466,550 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 53,200,500 | 78,386,836 | 72,807,215 | 66,495,607 | 24,357,000 | 23,999,100 | 49,327,233 | 60,915,987 |
| | மொத்தம் | 75,782,639 | 103,518,251 | 92,304,697 | 77,801,342 | 46,804,239 | 41,400,777 | 71,379,597 | 66,587,789 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 9,048,981 ஆக காணப்பட்டதுடன் அதில் அலகொன்று நிலுவை வீதவரி ரூபா 10,000 ஐ மிகைத்த 61 வீதவரி ஆதனங்களில் இருந்து மொத்தம் ரூபா 1,465,880 ஆன நிலுவையை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக. | . நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **முச்சக்கர வண்டி நிறுத்துமிடக் கட்டணங்கள்** | | |
| | 1952 இன் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்களின் (நிறைவேற்றப்பட்ட உப உறுப்புரை) சட்டத்தின் வாடகை | அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு | அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| வண்டிகளை நிறுத்தி வைத்தல் தொடர்பான உப உறுப்புரையின் பிரகாரம் முச்சக்கர வண்டிக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 1,385,025 ஆன நிலுவையொன்று காணப்பட்டது. | வருவதாக. | வேண்டும். |

**(இ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத்த தண்டப்பணம் ரூபா 400,000 மற்றும் முத்திரைக் கட்டணங்களாக ரூபா 62,923,945 ஆக இருந்ததுடன் அதில் 2015 – 2022 காலப்பகுதிக்குரிய கிடைக்க வேண்டிய்தாக காண்பிக்கப்பட்ட ரூபா 9,872,545 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அட்டவணைகள் காணப்படாத வருமானஙங்களைப் பதிவழிப்பதற்கும் ஏனைய வருடங்களின் வருமானத்தை அவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்**

பிரதேுச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டுகளில் மீண்டும் வருமானத்தை பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தாமல் ரூபா 89,685,362 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | தேவையான சந்தர்ப்பங்களில் பணமாக மாற்றுவதாக. | மிகை பணத்தை பிரதேச அபிவிருத்திக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 – 2024 காலப்பகுதியில் சபை 63 அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக உரிய காலத்தில் முறையான நடவடிக்கை ஒன்றை எடுக்காமை மற்றும் அந்நடைமுறைகளைத் தாமதித்த காரணத்தினால் சட்டதரணிக் கட்டணங்களாக ரூபா 2,072,400 தொகை செலவிடப்பட்டிருந்தது. | அத்துமீறிய அகற்றல்கள் செலவின கடப்பாடு என்பதாக. | அத்துமீறிய நிர்மாணம் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் 09 ரூட் 17 பேர்ச் அளவிலான கொணகலகல மற்றும் மாவதுபொல தெனியேபிட்டிய சுதுஹக்குருவத்த காணி 2012 ஆம் ஆண்டில் பிரிக்கப்பட்டு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்த போதும் பிரிக்கப்பட்ட திட்டம் சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை துண்டுகளாக விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் காணித் துண்டு திட்டத்திற்காக சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை காணி விற்பனையால் சபைக்கு அறவிடப்பட வேண்டிய 1 சதவீத பணம் மற்றும் 10 சதவீத அளவிலான காணியும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வழக்கு தொடர்ந்து அறவிடுவதாக. | பெற வேண்டிய பணத்தை அளவிடுவதற்கும் காணிப் பகுதியை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு நிர்மாணக் கடன்பட்டோர் மீதி ரூபா 19,044,682 ஆக இருந்ததுடன் அதில் 1 ஆண்டிற்கும் 3 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 1,126,576 ஆன கடன்பட்டோர் மீதியாக இருந்தது. | .அரச நிறுவனங் களிலிருந்து மீள் நிரப்பல் பெற்றுக் கொள்ளப்படவில்லை என்பதாக. | பெற வேண்டிய தொகை அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 87,063,144 ஆக இருந்ததுடன் அதில் 1 ஆண்டிற்கும் 3 இற்கும் இடைப்பட்ட ரூபா 21,059,402 தொகையும் 3 ஆண்டுகளிற்கும் 5 இற்கும் இடைப்பட்ட ரூபா 303,624 ஆன கடன் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தீர்வு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | செலுத்த வேண்டிய தொகை அறவிடப்பட வேண்டும். |

## 3.5 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 28,628,666 கூட்டு பெறுமதியான 02 இயந்திரங்கள் மற்றும் ரூபா 320,000 பெறுமதியான கணனி மென்பொருள் முறைமை ஒன்றும் 02 இற்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் விளைவற்றும் அல்லது குறை பயன்பாட்டுடன் காணப்பட்டன. | மிகை இயந்திரங்களை வேறு நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் ஏனைய சொத்துக்களை திருத்தி அமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக. | ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் மற்றும் திருத்தம் செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபை பயன்படுத்தும் பன்சலத்தண்ண வத்த மயான இடம் அமைந்துள்ள காணி மற்றும் விலான உடகம பல்நோக்கு கட்டிடம் மற்றும் சனசமூக மண்டபம் கல்லை கட நூலகம் மற்றும் கடைகள் அகுரண ஆயுர்வேத நிலையம் மற்றும் நூலகம் மற்றும் அகுரண பொது வைத்தியசாலை மற்றும் சிறிய வியாபார நிலையங்கள் அமைந்துள்ள காணிகளின் உரித்தை கைறேகப்பட்டு இருக்கவில்லை. | .எதிர்காலத்தில் கையேற்பதற்காக நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் உரித்து கையேடுற்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 93 (ஆ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேசத்தின் வீடுகளில் மலக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக முறையாக குழிகளை உரிய காலப் பகுதியில் சுத்திகரிப்பதற்கும் வெறுமையாக்கு வதற்கும் முடியுமான வகையில் கலிவண்டி சேவை ஒன்று நடத்திச் செல்லப்பட்டு இருக்க வில்லை. | பொருத்தமான இடமொன்று இல்லை என்பதாகவும் ஏனைய சபைகளால் செயற்பாடு நிறைவேற்றப்படுவதாகும். | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொது மக்கள் தேவைப்பாடு நிறைவேறற்ப்பட வேண்டும். |